மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 19 இதழ் / Issue 1 ஜனவரி / Jan 2021



"ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்;...அவைகளையும்
உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும்
நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? [மத்.6:26]



## ஆண்டவரே, எங்கள் தேசத்தை காப்பாற்றும்
## (LORD, SAVE OUR COUNTRY)




### நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள்

ஒரு சிறுமி, தன் சிநேகிதியிடம் தன்னுடன் சிற்றுலா (Picnic) வரும்படி தொலைபேசியில் அழைத்தாள். “சற்று பொறு, என் அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்” என்று சொல்லி அம்மாவிடம் சென்று கேட்டாள்.“ அம்மா அப்படிப் போக வேண்டாம்”என்று சொல்லிவிட் டார்கள். அதை சிநேகிதியிடம் வந்து சொல்லிவிட்டாள். ஆனால் “நீ வருந்திக்கேள், போக வேண்டும் என்று தீர்மானமாகக் கேள்” என்றாள். “இல்லை, என் அம்மா ஒரு முடிவு எடுத் தால் மாற்றிக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் எனக்கு எது நல்லது என்று அவர்களுக்குத் தெரியும் (She knows what is best for me) என்றாள். ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளாகிய நம் முடைய நன்மை கருதி அவருடைய வார்த்தையைக் கொண்டு நம்மிடம் பேசும்போது எந்த மறுப்புமின்றி “எனக்கு எது நல்லது என்று அவருக்குத் தெரியும்” என்று ஏற்றுக் கொள்ளும் மனபக்குவம் நமக்கு இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

நன்றி: The Speaker's Quote Book, Roy B. zuck



**மலர் - 19 ஜனவரி - 2021 இதழ் - 1**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. நீங்கள் ஜெயம் பெறுவீர்கள் | 6 |
| 3. ஒரே உலக மதம் | 10 |
| 4. லிடியா பிரின்சின்... | 16 |
| 5. என் சமுகம் உனக்கு முன்பாகச்... | 20 |
| 6. கிறிஸ்தியானின் மோட்ச.....(பாகம்-14) | 24 |
| 7. நான் உங்களோடே இருக்கிறேன் | 27 |
| 8 செய்திகள்.... | 5, 31 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940
Website : www.wordofchrist.org

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
**D.No.23-B, “தை கிரேஸ்”**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

## “என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்”

**(ஏசா. 51:16)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் புத்தாண்டு வாழ்த்துகள்

நாம் கடந்துவந்த, குறிப்பாக கடந்த ஆண்டை (2020) திரும்பிப் பார்க்கும் போது “அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்” சங்.91:4ன் என்ற வாக்குத்தத்தத்தின்படி அவரது செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுந்த நம்மைக் கொள்ளைநோயின் பயங்கரத்துக்கும் நம் கண்களைக் கண்ணீருக்கும் மற்றும் தீமைகளுக்கும் விலக்கிப் பாதுகாத்தார். புதிய ஆண்டிலும் வரவிருக்கும் ஆண்டுகளிலும் அவரையே நமது மறைவிடமாகக் (Hiding Place) கொள்ளுவோம்.

கிறிஸ்தவ மார்க்கத்தையும், மார்க்கத்தாரையும் அழித்துவிட எழுந்து சென்றவன் சவுல். இயேசுவின் அன்பு அவனைச் சந்தித்தது. அந்த அன்புக்கு அவன் அடிமையானான். அவன் பவுலாக மாறினான். “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது” (2 கொரி.5:14). “அன்பு ஒருக்காலும் ஒழியாது” என்கிறார் (1 கொரி.13:8). அந்த அன்பைத்தான் நாம் இன்று தியானிக்கப் போகிறோம். அன்பை ஒரு வரையறைக்குள் (Definition) அடக்குவது கடினம். அன்பு என்பது ஒரு மனஎழுச்சி (Emotion) என்று விளக்குவோர் உண்டு. அந்த எழுச்சியை ஒருவருடைய பேச்சிலிருந்து அல்லது அங்க அசைவுகளில் வெளிப்

படும் (Body language) தன்மையிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் அது தற்காலிகமானதால் அதை அன்பிற்கு வரையறையாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஆனால் வேதம் அன்பு என்றால் என்ன என்பதை ஒரு வரையறைக்குள் அமைத்திருக்கிறது. **"நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு;** நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ள வேண்டிய கற்பனை இதுவே" என்று அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார் (2யோவா.6). "கற்பனைகளின்படி நடப்பதே அன்பு" என்றால் அந்த அன்புக்குக் கீழ்ப்படிந்து அதன்படி நடப்பதையும் உள்ளடக்கியதாகும். அன்பும். கீழ்ப்படிதலும் அதன்படி செயல்படுவதும் ஒன்றுக்கொன்று இசைவானதாகும். வேறுவிதமாகச் சொன்னால் அன்பும் கற்பனைகளின் செயல்படுவதும் ஒன்றுக்கொன்று இசைவானதாகும். வேறுவிதமாகச் சொன்னால் கற்பனைகளின்படி செயலாக்கமே அன்பு (Commandments in action is love).

அப்படியானால் கற்பனைகள் எது என்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விவரித்துச் சொல்வதைக் காண்கிறோம். என்னில் அன்புகூருவாயாக (Love me), நீ உன்னில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக (Love your neighbour as yourself) (மத்.22:37-40). ஏன் ஆண்டவர் அவரில் அன்புகூரச் சொல்லுகிறார்? ஏனெனில் தாயின் கருவில் நான் உருவாவதற்கு முன்பாகவே என்னை அவரது சிந்தையில் திட்டமிட்டு, தாயின் கருவில் உருவாக்கி என்னை இவ்வுலகில் பிறக்க வைத்திருக்கிற அவர் என் பரம தகப்பன் (சங்.139:16). அவர் என்னைக்குறித்து ஒரு நோக்கத் தையும். திட்டத்தையும் வைத்திருக்கிறார் (எபே.1:4) அதாவது அன்பில் என்னை பரிசுத்தனாக தமக்கு முன்நிறுத்த உலகத்தோற்றத்திற்கு முன்னே என்னைத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆகவே அந்தத் தகப்பன்-மகன்/மகள் உறவை நான் என் சிந்தையில் எப்பொழுதும் நிறுத்திக் கொள்ள வேண்டும். என்னை உருவாக்கியதுபோலவே என்னுடைய பிறனையும் உருவாக்கி யிருக்கிறார். ஆகவே நீ உன்னில் அன்புகூருவது போல அவனிலும் அன்பு கூருவாயாக என்று கூறுகிறார். வேறுவிதமாகச் சொன்னால் உன் சகோதரனாக நேசி என்று சொல்லுகிறார் (மத்.22:37-40). இப்படிப்பட்ட அன்பின் பிரமாணத்தைத்தான் அப்போஸ்தலனாகிய யாக்கோபு "இராஜரிகப் பிரமாணம்" (Royal Commandment) என்று குறிப்பிடுகிறார் (யாக்.2:8).

இதை நடைமுறைப்படுத்த இயேசுகிறிஸ்து தம்மை ஒப்புமைப்படுத்தி சீடர் களுக்குச் சொல்லும்போது "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்.... நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று

எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோவா.13:34,35) வேறு விதமாகச் சுருக்கமாகச் சொன்னால் "நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்" (You follow me) என்று நமக்கு முன்பாக ஒரு முன் மாதிரியாகச் (Role Model) சொல்லுகிறார். நாம் அவரைப் பின்பற்றினால் போதும். ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பேதுரு, இயேசுகிறிஸ்து விட்டுச் சென்றிருக்கும் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து செல்ல நமக்கு முன்மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார் (1 பேது.2:21) நாம் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.

நாம் இயேசுகிறிஸ்து காட்டிய அன்பில் நடக்கவேண்டுமென்பதை எளிதில் விளங்கிக் கொள்ள ஒரு தேவஊழியர் இவ்வாறாகச் சொன்னார். 5 சுவி சேஷங்கள் இருக்கின்றன. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான். 5ஆவதாக "நாம்". மக்கள் 4 சுவிசேஷங்களைப் படிப்பதில்லை. 5ஆவது சுவிசேஷமாகிய நம்மைத்தான் படித்தறிகிறார்கள். ஆகவே இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி நாம் நடப்போமானால் அந்த விசேஷித்த அன்பு வெளிப்படும். நம்மில் வெளிப் படுகிற அந்த அன்பைக் காணும்போது அது மற்றவர்களையும் கவர்ந்து ஈர்க்கும். அந்த அன்பு பரவும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொரு வரிலும் எதிர்பார்ப்பது அதுதான். இது நம்மால் சாத்தியமாகாது. ஆனால் அவருடைய கிருபையின் ஆவியால் சாத்தியமாகும். அவரது கிருபையில் சார்ந்து கொண்டு அன்பில் வளருவோம். அன்பில் பரிசுத்தனாக அவர் முன்பு நிற்க நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளுவோம். இயேசுவின் பணியில்,

K. செல்வின் தங்கதுரை

**இந்தியாவின் உச்சநீதிமன்றக் குறிக்கோள் வாசகம் (Motto)**

**"Yato dharma tato jeya"**
**(Where there is dharma there is victory)**
**(எங்கே தர்மம் இருக்கிறதோ அங்கே வெற்றியுண்டு)**

இந்தக் குறிக்கோள் வாசகம் பகவத் கீதையிலிருந்து எடுக்கப்பட்டு உச்சநீதி மன்றத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. ஆழ்ந்து அறிந்து தெரிந்தெடுக்கப் பட்ட மிக அருமையான வாசகம். ஆனால் காலத்தால் ஏற்பட்டிருக்கும் எண் ணங்களின் மாற்றத்தால் எது தர்மம் என்ற சர்ச்சைகள் எழுந்து கொண்டி ருக்கிற காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே உச்சநீதி மன்றம் "தர்மம்" என்ற அடிப்படைக் கோட்பாட்டில் (Concept of dharma) சர்ச்சைகள் தொடர்வதைத் தவிர்க்க வரையறை (definition) செய்வது நல்லது.

**"We need a Law that should wipe away the tears of the poor" -**
**Justice (Late) V.R.Krishne Iyer, Supreme Court.**

**"கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக..."** (நீதி.3:3)

# நீங்கள் ஜெயம் பெறுவீர்கள்

**“ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளு கிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்”** (வெளி.2:26)

பிரியமானவர்களே! மேற்குறிப் பிட்ட வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப நீங்கள் ஜெயம்பெற்று தேவ னுடைய ஆசீர்வாதத்தைப் பெறப் போகிறீர்கள். எல்லாக் காரியத்திலும் இயேசுகிறிஸ்து உங்களுக்கு ஜெயத்தைத் தரும்படி ஆயத்தமா யிருக்கிறார். “நான் உங்களை ஜெயிக்கப்பண்ணுவேன்” என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனமாக உங்களுக்குச் சொல்லுகிறார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசித்துவந்த இளம் வாலிபன் ஒருவன், அமெரிக்க இராணு வத்தில், விமானப் படையில் பைலட் டாக வேலை செய்தான். இரண்டாம் உலகப்போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த நேரம் அது. 1944ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், அவன் வேலை செய்யும் இடத்திலிருந்து, “உடனே புறப் பட்டு வேலை ஸ்தலத்திற்கு வர வேண்டும்” என்று அவனுக்கு ஓர் அழைப்பு வந்தது. அவன் அவசரமாகப் புறப்பட்டு செல்லும் நேரத்தில் ஓர் ஊழியக்காரர் வந்து, “தம்பி உங்களுக்காக ஜெபிக்க வேண்டும்” என்று சொன்னார். அவனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. மறுபடியும் பிறந்த (Born again) அனுபவத்தையுடைய அந்த வாலிபன், தெய்வ பயத்தோடு அந்த ஊழியரை ஜெபிக்கும்படி சொன் னான். அவர் நீண்ட நேரம் ஜெபித் தார். ஜெபித்துவிட்டு, தேவனுடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாகச் சொன்னார். “வாலிபனே, நாளொன்று வரும்; நீ இந்த தேசத்தின் ஜனாதிபதி யாகி, இந்த தேசத்தின் ஜனங்களை ஆளுகை செய்வாய்; கர்த்தர் உன் னைத் தேசத்தின் தலைவனாக மாற்று கிறார்” என்று சொன்னார். அதைக் கேட்ட அந்த வாலிபனுக்கு, இந்தச் செய்தியைக் கேட்டு மகிழுவதா? துக்கப் படுவதா? என்று ஒன்றுமே தெரிய வில்லை. காரணம், “நான் இப் பொழுது போருக்குச் செல்லுகிறேன்; திரும்பி வருவேனா என்று எனக்கே தெரியாது. ஆனால், எனக்கு இப்படிப் பட்ட தீர்க்கதரிசனம் வருகிறதே” என்று எண்ணினான். அதைத் தேவ னுடைய வார்த்தையாக நம்பினான். போருக்குப் புறப்பட்டுச் சென்றான். விமானப்பிரிவின் தலைவராக விமானத்தை இயக்கினான். அவ னோடு கூட இரண்டுபேர் பயணம் செய்தார்கள், ஜப்பானிலுள்ள ஜி-ஜி ஜிமா (chi-chi jiima) என்ற பகுதியில் குண்டுகளைப் பொழியும்படி அவனுக்கு இராணுவத் தலைமை யகம் கட்டளை பிறப்பித்தது. அவன்

விமானத்தை ஓட்டிக்கொண்டு அந்தத் தீவிற்குச் சென்றான். அந்தத் தீவிலே குண்டுகளைப் போடும்பொழுது, கீழே ஜப்பானியர்கள் தரையிலிருந்து அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர். அந்த விமானம் நிலை குலைந்து பசுபிக்கடலில் விழுந்தது. அந்த வாலிபன் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த ஊழியர் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தை அவனுடைய ஞாபகத்திற்கு வந்தது. நான் எப்படியும் பிழைப்பேன் என்ற நம்பிக்கை துளிர்த்தது. இந் நிலையில் மிகுந்த போராட்டத்திற்குப் பின்பு, அமெரிக்கக் கடற்படையினர் அவனைக் காப்பாற்றினர். மற்ற இரண்டு இராணுவ வீரர்களும் அங்கேயே மரித்துப்போனார்கள். ஒரு வருடத்திற்குப் பின்பு அந்த வாலிபன், இராணுவத்திலிருந்து விடுபட்டு, தன்னுடைய கல்லூரிப் படிப்பைத் தொடருவதற்காகச் சென்றான். கல்லூரியில் படித்து, படிப்பை முடித்தான். அவனுக்கு திருமணம் நடந்து, குழந்தைகளும் பிறந்தன. அதற்குப் பின்புதான், தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தை அவனுடைய வாழ்க்கையில் நிறைவேற ஆரம்பித்தது. ஏறக்குறைய முப்பத்தைந்து - நாற்பது வருடங்கள் கழித்து, அமெரிக்காவின் 41ஆவது ஜனாதிபதியாக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். ரொனால்டு ரீகன் ஜனாதிபதியாக இருந்தபொழுது துணை அதிபராகப் பணிபுரிந்து, பின்பு அதிபராகப் பொறுப்பேற்ற ஜார்ஜ் H.W.புஷ் என்பவர்தான் அந்த இளம் வாலிபன். ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தை ஒருநாளும் பொய்க்காது. ஆகவேதான், **“தீர்க்க தரிசனத்தை அற்பமாயெண்ணாதிருங்கள்”** என்று வேதம் கூறுகிறது. உங்களுக்கு ஆதரவாக தேவனுடைய வார்த்தைகளும், தீர்க்கதரிசன வசனங்களும் இருக்கிறதா? நீங்கள் உங்கள் வாழ்வில் ஜெயிப்பீர்கள்.

## சாட்சியின் வசனம்

அநேக சூழ்நிலைகள் நம்மைச் சூழ்ந்துகொண்டு நெருக்கலாம். அநேக ஆபத்துகள் நம்மை நெருங்கி வரலாம். ஆனால், தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயத்தில் இருக்கும்பொழுது, நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாறுவோம்.

கல்லூரி ஒன்றில் பேராசிரியராக இருந்த ஒருவர், இவ்விதமாக என்னிடம் ஒரு காரியத்தைப் பகிர்ந்து கொண்டார்: “எனக்கு 40வயது ஆகும்போது நான் இறந்துவிடுவேன் என்கிற பயம் எங்கிருந்தோ எனக்குள் வந்தது. ஒருவித சத்தம் எனக்குள் கேட்டுக்கொண்டேயிருந்தது. அது ஒவ்வொருநாளும் என்னை வாட்டி வதைத்தது. ஒருநாள், ‘இயேசு அழைக்கிறார்‘ நிறுவனர் சகோதரர். பால் தினகரன் அவர்கள் ஒரு ஜெபக் கூட்டத்தை முடித்துவிட்டு அந்த வழியாக வந்தபொழுது, அந்தப் பேராசிரியரைக் கண்டு, உங்களுக்காக நான் ஜெபிக்கவேண்டும்: தேவன் உங்

களைக் குறித்துத் தீர்க்கதரிசனமான வார்த்தைகளை உங்களிடம் சொல்ல வேண்டும்'' என்று சொன்னார். உடனே அந்தப் பேராசிரியர், மிகுந்த மகிழ்ச்சியோடு அவரை ஜெபிக்கும் படி வேண்டிக்கொண்டார். அவர் ஜெபிக்கும்பொழுது, ''தேவன் எனக்கு சொல்லுகிறார்; 40வயதில் நீங்கள் இறந்துவிடுவீர்கள் என்கிற எண்ணம் உங்களுக்குள் வந்து உங்களை வாட்டிக் கொண்டேயிருக் கிறது; அது பொய்யான வார்த்தை. பிசாசு பொய்யனும், பொய்க்குப் பிதா வுமாயிருக்கிறான். ஆனால் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள் என்று தேவ னுடைய வார்த்தை சொல்லுகிறது என்றார். அந்த வார்த்தையைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். அன்றிலிருந்து அந்தப் பயம் என்னை விட்டுப் போய்விட்டது'' என்று என் னிடம் சொன்னார். இன்றைக்கு அவர் தன்னுடைய 50ஆவது வயதைக் கடந்து வாழ்ந்து கொண்டி ருக்கிறார். எனக்குப் பிரியமான வர்களே, தீர்க்கதரிசனமாக இயேசு சொல்லுகிற வார்த்தை இதுதான். நீங்கள் ஜெயிப்பீர்கள், ஜெயம் கொள்ளுவீர்கள்.

ஆம், பிரியமானவர்களே, **''தேவ னால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசு வாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்''**(1 யோவா.5:4) ''ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ் யத்தில் பிரவேசிக்க மாட்டான்'' என்று மறுபிறப்பைக் குறித்து நிக்கொதேமுவிடம் இயேசு சொன் னார் (யோவா.3:5) இங்கு இயேசு கிறிஸ்து ஆவியினால் ஒரு மனு ஷனும், மனுஷியும் பிறப்பதைக் குறித்துத் தெளிவாகச் சொல்லுகிறார். இப்படி ஆவியினாலே பிறந்தவர் களைப் பார்த்து, பரிசுத்த யோவான் பின்வருமாறு விளம்புகிறார். **''பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்தி லிருக்கிறவனிலும் உங்களிலிருக் கிறவர் பெரியவர்''** (1 யோவா.4:4). இந்தியா சுதந்திரப் போராட்டத்தின் வேட்கையில் இருந்தபொழுது, சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவர், பாலகங்காதர திலகர் என்று அழைக்கப்படும் ஒரு சுதந்திர வீரர். அவர் 1856இல் பிறந்து, இந்தியாவில் சுதந்திரப் போராட் டத்தை நடத்தினார். அவர் சுதந்திரத் தாகத்தோடு, ஆங்கிலேயர் ஆதிக் கத்தில் இந்தியா அடிமைத்தனத்தில் இருந்தபொழுது, ''சுதந்திரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன்'' என்று முழங்கினார்.

பிரியமானவர்களே, அதேபோல நாம் தேவனால் பிறந்து, அவருடைய புத்திரராயிருக்கிறோம். எந்த அடிமைத்தனமும் நம்மை ஆளுகை செய்ய முடியாது. **''ஜெயம் நம் முடைய பிறப்புரிமை''**. அதற்காக நாம் பரிகாரம் தேடவேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்து நமக்குப் பரிகாரியாக சிலுவையில் மரித்தார். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு

ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' என்று 1 கொரி.15: 57லும், ''இவையெல்லாவற்றி லேயும் நாம் நம்மில் அன்புகூருகிற வராலே முற்றும் ஜெயங்கொள்ளு கிறவர்களாயிருக்கிறோமே'' என்று ரோம.8:37லும் வேதம் சொல்லு கிறது. நம்முடைய தேவன் நம்மை ஜெயிக்கப் பண்ணுகிறார். அவர் நமக்காகச் சிலுவையில் மரித்து, அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுதலையாக்கினார்.

பல வேளைகளில் நீங்கள், ''என் னுடைய ஜாதகம், இராசி பலன் எனக்கு எந்தவிதத்திலும் ஆதரவாக இல்லை; என்னுடைய பரம்பரை சாபம் என்னை அழுத்துகிறது; நான் செய்ய வேண்டும் என்று நினைப் பதை, என்னால் செய்ய முடிய வில்லை; பலவிதமான சூழ்நிலைகள் என்னை அமிழ்த்திவிடுகிறது. நான் தோல்வியடைகிறேன்'' என்று சொல்லுகிறீர்கள். ஆனால், ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்து உங்களைப் பார்த்து, ''நான் உங்களை ஜெயிக்கப் பண்ணுவேன்'' என்று சொல்லு கிறார். அவர் நம்மைப் பார்த்து, ''மனம் திரும்புங்கள்'' என்று சொன் னார். ஏன் அவர் நம்மை மனந் திரும்பும்படி சொன்னார் தெரியுமா? நாம் மனந்திரும்பும்பொழுது, நாம் அவருடைய பக்கத்தில் வந்துவிடு கிறோம். அவர் நமக்குள் வருகிறார், அவர் நமக்குள் வந்துவிட்டால், நமக்கு ஜெயத்தைத் தருகிறார். ஆகவேதான், பரிசுத்த பவுல், **''வாலிபரே, நீங்கள் பலவான்களா யிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிற தினாலும், நீங்கள் பொல்லாங் கனை ஜெயித்ததினாலும், உங் களுக்கு எழுதுயிருக்கிறேன்''** என்று சொல்லுகிறார் (1 யோவா.2:14). ''நீங்கள் ஜெயித்தீர்கள்'' என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். ''...உலகத்தில் உங்களுக்கு உபத் திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்''என்று ஆண்டவர் இயேசு சொல்லுகிறார் (யோவா.16 :33). ''நான் உங்களை ஜெயிக்கப் பண்ணுவேன், நீங்கள் ஜெயிப்பீர்கள்'' என்று சொல்லுகிறார்.

ஆம் பிரியமானவர்களே, உங் களுக்கு எதிராக வருகிற பாவங் களையும், சாபங்களையும், சூழ் நிலைகளையும் நீங்கள் ஜெயிப் பீர்கள். பிசாசு உங்களை வஞ்சிக்கும் படியாக வரக்கூடும். அவன் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான். ஆனால், கர்த்தர் நம்மைப் பார்த்து, ''நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக் கவும், அது பரிபூரணப்படவும் வந் தேன்'' என்று சொல்லுகிறார் (யோவா.10:10). தேவன் உங் களுக்கு பரிபூரண ஜீவனையும், வெற்றியுள்ள வாழ்க்கையையும் தருவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறார். கர்த்தர் தாமே உங்க ளுக்கு ஜெயமுள்ள வாழ்க்கையைத் தந்து வழிநடத்துவாராக! ●

**- டாக்டர். பால் N,**
**Mo: 9884739635**
**www.gloryofjesus.org, Chennai.**

# ஒரே உலக மதம்

## (One World Religion)

உலகில் பல்வேறு மதங்கள் இருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று விரோதத்தையும். பகைமையையும் உருவாக்குகின்றனவேயன்றி அன்பை உருவாக்குவதாக இல்லை என்பது ஒரு நிதரிசனமான உண்மை. மனுக் குலத்தில் நடந்த முதற்கொலையே சமய வழிபாட்டையொட்டியதாகவே இருந்தது என்பதை வேதத்தில் காண்கிறோம். ஆதாமும், ஏவாளும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட அடுத்த சந்ததியிலேயே மூத்தவன் காயீன் இளையவனாகிய ஆபேலைக் கொலை செய்தான். இக்கொலையின் மூலகாரணத்தை அப்போஸ்தலனாகிய யோவான், விவரிப்பதைக் காண்கிறோம். ‘‘அவன் (காயீன்) எதினிமித்தம் அவனைக் (ஆபேலை) கொலை செய்தான்? தன் (காயீன்) கிரியைகள் பொல்லாதவைகளும் (Evil), தன் சகோதரனுடைய (ஆபேல்) கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தம் தானே’’ (Righteous) என்றும் ‘‘பொல்லாங்கனால் (Wicked) உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீன்’’ என்றும் (1 யோவா.3:12)இல் வாசிக்கிறோம். பொல்லாங்கனான சாத்தானுக்கும் நீதியான தேவனுக்குமான ஒரு யுத்தம் அன்றே ஆரம்பித்தது என்று சொல்லலாம். அந்த யுத்தம் இன்றுவரை தொடர்கிறது.எல்லா மதங்களிலும் பொல்லாங்கனின் செயலினால் இரத்தச் சாட்சிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆகவேதான் வேதம், அவன் (பிசாசானவன்) மனுஷகொலை பாதகனாயிருக்கிறான் (Murderer). சத்தியம் அவனிடத்தில் இல்லை. அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் (Liar and father of lies) என்று யோவா 8:44 வர்ணிக்கிறது. ஆனால் தேவனைச் சத்தியபரர் (God of truth) என்று சங். 31:5 இல் வேதம் வர்ணிக்கிறது. ஆகவே இது சத்தியபரருக்கும் பொய்க்குப் பிதாவாக இருக்கும் பிசாசானவனுக்குமான யுத்தம்.

பிசாசானவனின் நோக்கம்தான் என்ன? அதைத்தான் ஏசாயா 14:13,14இல் வாசிக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால் ‘‘நான் மேகங்களுக்கு மேலாக ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன்’’ என்கிறான். அதாவது யாவரும் தன்னை வணங்கவேண்டும் என்பதே அவனது முதன்மையான நோக்கம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பிசாசானவன் சோதிக்கும் போது அவனது நோக்கம் வெளிப்படையாகிறது (லூக்.4:2-13). நீ என்னைப் பணிந்து கொள் (Worship me). இந்த உலகத்தின் இராஜ்ஜியங்களையெல்லாம் உனக்குத் தருகிறேன், இவைகள் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்குக் கொடுப்பேன் என்றான். ‘‘உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று

எழுதியிருக்கிறதே'' என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பதிலளித்தார். பணிந்துகொள்ள வேண்டியவர் தேவனாகிய கர்த்தர் ஒருவரே.

### கர்த்தரை ஆராதிக்க, என் ஜனங்களைப் போகவிடு

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது மோசேயும், ஆரோனும் பார்வோனிடம் சென்று ''கர்த்தரை ஆராதிக்க என் ஜனங்களைப் போகவிடு'' என்று கேட்டார்கள். ''கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போக விடுவதில்லை'' என்று மறுத்தான் (யாத்.5:2). பார்வோனின் இருதயம் மிகவும் கடினப்பட்டது. அவர்களுக்கு அவர்களுடைய தெய்வத்தைக் குறித்துச் சிந்தை வராதிருக்கவும் மோசே, ஆரோன் இவர்களின் ஆலோசனை களுக்குச் செவி கொடாதிருக்கவும் வேலைப்பளுவை வெகுவாய்க் கூட்டி னான். ஆளோட்டிகளுக்கு (Task masters), எபிரேயர்களை கடுமையாக நடத்தக் கட்டளையிட்டான். வேலைப்பளுவின் நெருக்கமும், அழுத்தமும் பெருகிற்று. ஆனாலும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அற்புதமாக அவர்களை விடுதலை செய்தார். பார்வோன் ''நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்... என்னையும் ஆசீர்வதியுங்கள்'' என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட அவர்களைத் துரிதப்படுத்தினார்கள் என்று (யாத்.12:31-35)இல் காண்கிறோம். ''கர்த்தர் யார்?'' என்று ஆணவத்தோடு மறுத்த பார்வோன் இப்பொழுது ஆராதனை செய்ய அனுப்பி வைத்ததோடு ''என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று கர்த்தர் பார்வோனை அவன் வாயால் சொல்ல வைத்தார். எகிப்தியர், இஸ்ரவேலின் தேவன் யார், எப்படிப்பட்டவர் என்பதை அறிந்து கொண்டார்கள். வரலாற்றுத் தகவலின்படி கி.மு.1445இல் விடுதலைப் பயணத்தை தொடக்கி கி.மு.1405இல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசித்தார்கள்.

### நேபுகாத்நேச்சார் நிறுத்திய பொற்சிலை வணங்கப்பட ஆணை

இஸ்ரவேல் மக்கள் தேவன் அருளிய பிரமாணங்களுக்கு மாறாக, தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களில் ஈடுபட்டபோது பாபிலோனியப் பேரரசன் நேபுகாத்நேச்சாரின் கைகளில் அவர்களை ஒப்புவித்து அவர்களை அடிமைகளாக மாற்றினார். அநேகர் அடிமைகளாகப் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுள் தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா ஆகிய நான்குபேருமே அரண்மனையில் பணியாற்றத் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். அவர்கள் யெஹோவா தேவனின் பெயர் மறக்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காக பாபிலோனிய தெய்வங்களின் பெயர்களை அவர் களுக்குச் சூட்டினான். இராஜபோஜனம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டதையும் ஏற்றுக்கொள்ளாமல் மரக்கறிகளை உண்டனர். ஆனாலும் பாபிலோனில்

தங்களைத் தீட்டுப்படாமல் காத்துக் கொண்டனர். தானியேல் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னதைத் தொடர்ந்து தானியேலும் அவனது நண்பர்களும் பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தில் உயர்பதவிக்கு உயர்த்தப்பட்டனர். எபிரேயர்கள் நம்மை ஆளுவதா என்று பொறாமை கொண்டு பாபிலோனிய அரசின் உயர்அதிகாரிகள் சதித்திட்டம் தீட்டினர். தெய்வத்தை வணங்கும் விஷயத்தில்தான் இவர்களை சிக்கவைக்க முடியும் என்று திட்டமிட்டு **நேபுகாத்நேச்சார் நிறுத்தும் பொற்சிலையை சகல அதிகாரிகளும் தாழவிழுந்து வணங்கவேண்டும்** என்ற இராஜ ஆணை பிறப்பிக்க வைத்தனர் (தானி.3:1). **வணங்காதவர்கள் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவில் போடப்படுவார்கள்** என்ற தண்டனையும் அறிவிக்கப் பட்டது. முன் அறிவிப்பின்படி கீதவாக்கியங்கள் இசைக்கப்படும் போது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவர் மாத்திரம் பொற்சிலையை வணங்க மறுத்தனர் என்பது தெரியவந்தது. ஆனாலும் அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ‘‘உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்?’’ என்று பார்க்கலாம் என்று இராஜா சவால்விட்டான் (வ.15). ஆனாலும் அவர்கள் ‘‘நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வது மில்லை’’ என்று எதிர் சவால்விட்டனர் (வ.18). நேபுகாத் நேச்சாருக்கு கோபம் மூண்டது. அக்கினிச் சூளை ஏழுமடங்கு அதிகமாகச் சூடாக்க உத்தரவிடப் பட்டது. மூவரும் அக்கினிச் சூளையில் போடப்பட்டனர். எனினும் அக்கினி அவர்களைச் சேதப்படுத்தவில்லை. அவர்கள் அக்கினிச் சூளையில் உலா வினார்கள். அவர்களோடு நான்காவது நபராக தேவபுத்திரனுக்கு ஒப்பான வரை இராஜா உட்பட அனைவரும் கண்டார்கள். இராஜா அதிர்ச்சி யடைந்தான். ‘‘உன்னதமான தேவனுடைய தாசராகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே நீங்கள் வெளியே வாருங்கள்’’ (வ.26) என்று நேபுகாத் நேச்சார் அழைத்தான். ‘‘உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்?’’ என்று சவால்விட்டான். இப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் தேவனே தேவன் என்றும் அந்த தேவனுக்கு விரோதமாகச் செயல்படுபவர்கள் யாராயினும் அவர்கள் துண்டிக்கப் படுவார்கள், அவர்கள் வீடு எருக்களமாக்கப்படும் என்று தீர்மானித்து ‘‘இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை’’ என்று பிரகடனப்படுத்தினான் (வ.29).

### தன்னை வணங்கும்படி தரியு இராஜாவின் ஆணை

பாபிலோனிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்து மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் மேற்கொண்டது. மேதியனாகிய தரியு இராஜாவின் ஆளுகை காலத்திலும் தானியேலின் உயர்பதவி தொடர்ந்தது. அப்பொழுதும் பிரதானிகளும், தேசாதி பதிகளும் தானியேல் மீது குற்றம் கண்டுபிடிக்க முயன்று தோல்வியுற்ற

நிலையில் தேவனை வணங்கும் விஷயத்தில்தான் அவனில் குற்றம் கண்டுபிடிக்க முடியும் என்று திட்டமிட்டனர். **தரியு இராஜாவைத் தவிர வேறு எந்த தேவனையும் 30நாட்களுக்கு வணங்கக்கூடாது என்றும் மீறினால் சிங்கங்களின் கெபியிலே போடப்படுவார்கள்** என்றும் ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஆனாலும் ''தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம்பண்ணி விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள்'' (தானி.6:11) இந்த மீறுதல் தரியு இராஜாவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இராஜா அவனை விடுவிக்க மனதாயிருந்தும் அவனால் எதுவும் செய்ய இயலவில்லை. தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்டான், இராஜாவின் ஆணைப்படி தானியேலைச் சிங்கங்களின் கெபியில்தான் போடமுடிந்ததே தவிர சிங்கங்கள் அவனைக் கொன்று தின்றுபோட ஆணையிட முடியவில்லை, ஏனெனில் இராஜாவுக்கும் மேலான அதிகாரமுள்ள தேவன் தமது தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார். அதிகாலையில் இராஜாவே கெபியின் கிட்டேபோய் ''தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடை விடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா?'' என்று கேட்டான் (தானி.6:20). தரியு இராஜாவின் விசுவாசத்தைப் பாருங்கள். தானியேலை குற்றம் சாட்டிய அதிகாரிகள் எல்லாம் இராஜாவின் ஆணையினால் சிங்கங்களின் கெபியில் போடப்பட்டார்கள். சிங்கங்கள் அவர்களைப் பாய்ந்து பிடித்துக் கொன்று எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது. தானியேலின் தேவனே, தேவன். அவர் ஜீவனுள்ள தேவன். அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். அவருடைய இராஜ்யம் அழியாதது. தானியேலைத் தப்புவித்த தேவனே இரட்சகரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான் (வ.26,27).

### இராயனே தேவன் (Caesar is Lord)

அப்போஸ்தலனாகிய யோவான் பெர்கமு சபைக்கு எழுதிய கடிதத்தில் பெர்கமு ''சாத்தானுடைய சிங்காசனம் இருக்குமிடம்'' என்று சொல்லப்பட்டி ருக்கிறது (வெளி.2:13). பெர்கமு நகரம் உரோம ஆளுகையின் கீழ் இருந்த காலம் அது. உரோம வரலாற்றில் முதல் முறையாக உரோம இராயனுக்கு பெர்கமு நகரில் ஓர் ஆலயம் கட்டப்பட்டது (Temple for Caesar of Rome). அதில் ஒரு தூப பீடம் அமைக்கப்பட்டது. **இராயனுடைய ஆலய வழிபாட்டில் தூபவர்க்கத்தை எடுத்துத் தூபபீடத்தில் போட்டு "இராயனே தேவன்" என்று சொல்லவேண்டும். சொல்ல மறுப்பவர்கள் சித்திரவதைக்குள்ளா வார்கள்** (Subject to torture). வெளி.2:13இல் சொல்லப்பட்ட அந்திப்பா என்ற பக்தன் இராயனை வணங்க மறுத்ததால் கொல்லப்பட்டான். இவைகளெல்லாம் வேதத்தில் சொல்லப்பட்ட முன்னோடிச் சம்பவங்களாக இருக்கின்றன.

அவைகள் வரவிருக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையையும் அவனது ஆளுகையில் நடக்கயிருக்கும் சம்பவங்களையும். நமக்கு முன்னறிவிப்பவை களாயிருக்கின்றன. நாம் முன்னெச்சரிக்கை அடையவே இவைகளெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

### "என்னை வணங்குங்கள்", வரயிருக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆணை (2 தெச.2:4)

வரயிருக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை உலகம் தழுவியதாக இருக்கும். ஒரே உலகம், ஒரே மதம் என்ற நிலை உருவாகும். வரவிருக்கும் அந்திக்கிறிஸ்து **"தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்"** (2 தெச.2:4). மேலும் **அந்திக்கிறிஸ்து தன்னை அடையாளப்படுத்தும் வகையில் ஒரு சொரூபத்தை உண்டுபண்ணி, அந்தச் சொரூபத்தை யாவரும் வணங்க வேண்டுமென்றும் வணங்காதவர்கள் கொலை செய்யப்படவேண்டும்** என்றும் ஆணை பிறந்தது (வெளி.13:14,15). அப்பொழுது அந்திக்கிறிஸ்துவைத் தொழுது கொள்ளுகிற ஒரே மதம் மட்டுமே இருக்கும். தொழுதுகொள்ளாதவர்கள் சித்திரவதைக்குள்ளாவார்கள், கொல்லப்படுவார்கள். அந்திக்கிறிஸ்துவை தொழுதுகொள்ள ஒப்புக்கொண்ட வர்கள் அவனது 666 என்ற எண்ணுள்ள முத்திரையைப் பெற்றுக் கொள்வார்கள். அவனது கொடிய ஆக்கினைக்குத் தப்பித்துக் கொள்வார்கள். ஆனால் அவ்வாறு முத்திரையைத் தரித்துக்கொண்டவர்கள் நித்திய வாழ்வில் பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள் (வெளி.14:10). தரித்துக்கொள்ளாதவர்கள் இரத்தச்சாட்சியாக மரித்தாலும் உயிர்த்தெழுந்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளி.20:4).

### அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு நாம் தப்பித்துக் கொள்ளும் மார்க்கம்

இன்றும் நம்முடைய தேசம், ஒரே தேசம் (One nation), ஒரே மொழி (One language), ஒரே ரேஷன் அட்டை (One Ration Card), தேசத்தின் குடிகளுக்கு ஒரே வரிசை எண் (One Number), ஒரே கல்விமுறை (One educational policy), ஒரே மதம் (One Religion) என்ற நிலையை நோக்கித் துரிதமாக நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். ஆகவேதான் இதை முன்னறிந்த அப்போஸ்தலனாகிய யோவான் **"பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக் கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்"** (1 யோவா.2:18) ஒரே வசனத்தில் "இது கடைசிக்காலம்" என

இரண்டு முறை வலியுறுத்திச் சொல்வதைக் கவனித்துப் பாருங்கள். ஆகவே நாம் கடைசிக் காலத்திற்குள் வந்திருக்கிறோம் (End Time) என்பது உறுதிப் படுகிறதல்லவா?.

ஆனாலும், அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையின் காலத்திற்குள் நாம் சென்று விடாமல் தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தை ஆண்டவர் நமக்கு வைத் திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடையவர்களைச் சேர்க்க வருகிறார். **"அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:23). உயிரோடிருக்கும் அவருடையவர்கள் மறுரூபமடை வார்கள்** (வ.51,52). "அவருடையவர்கள்" என்றால் யார்? அப்போஸ் தலனாகிய யோவான் "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ண மாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற வனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்தி கரித்துக் கொள்ளுகிறான்" என்று (1 யோவா.3:2,3)ல் அவர்களை அடை யாளங்காட்டுகிறார். வேறுவிதமாகச் சொன்னால் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுவதுபோல இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வளர்ந்தவர்களே அவருடையவர்கள் (ரோம.8:29). நாம் அவருடையவர்கள் என்ற நிச்சயம் நமக்கு இருக்கிறதா? நம்மை நாமே சுயஆய்வு செய்து சீர்ப்படுத்திக் கொள் வோம். அவர் வருகையில் அவரோடு காணப்பட ஆயத்தப்படுவோம். "இனி காலம் செல்லாது" (There is no longer time) என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது. எச்சரிக்கையடைவோம். ●

---

**19 ஆம் பக்கத் தொடர்ச்சி...**

**"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவ னுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவை களைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை களையே நாடுங்கள்"** (கொலோ.3:1.2) என்ற வசனத்திற்கேற்ப நமது இருதயத்தை மேலானவற்றில் பதிக்கும்போது ஆண்டவர் நமக்குத் தமது அழைப்பின்படியும் முன்னறிவின்படியும் நாம் அறியாத புதிய வாசல் களைத் திறந்து கொடுக்கிறார். இந்தத் தரிசன இலக்கோடு நாம் முன்னேறிச் செல்லுவோம். லிடியாவை வழிநடத்திய ஆண்டவர் நம்மையும் மேலான தரிசனங்களைத் தந்து வழிநடத்த நம்முடைய வழிகளை அவருக்கு ஒப்புவிப்போம். ●

- தகவல்: "Appointment in Jerusalem"- Derek Prince என்ற புத்தகத்திலிருந்து

- Testimony of Tikvah, the first child of the "Prayer House"


1890 - 1975

# லிடியா பிரின்சின் ஆச்சரியமான வாழ்க்கை
# (The Amazing Life of Lydia Prince)

**"பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்" [கொலோ.3:2]**

**தேடுகிறவர்கள் கண்டடைகிறார்கள்**

1920ஆம் ஆண்டுகளின் மத்தியில் டென்மார்க், நடைமுறை - லூத்தரன் தேசமாக இருந்தது (Orthodox Lutheran Nation). அத்தேசத்தின் குடிகள் அனைவருமே லூத்தரன் கிறிஸ்தவர்களாக இருந்தனர். லிடியா பிரின்ஸ், டென்மார்க்கிலுள்ள பெரிய செல்வந்தரின் மகளாகப் பிறந்தார். அவர் அங்குள்ள பல் கலைக்கழகத்தின் பட்டதாரியாகவும், அரசு நடத்தும் பள்ளியில் குடும்பயியல் விஞ்ஞானப் பிரிவின் (Domestic Science) துறைத் தலைவராகவும் பணியாற்றினார். அவருக்கென்று தனியான அலுவலகம், உதவியாளர்கள், கைநிறைய சம்பளம் இவற்றிற்கெல்லாம் எந்தக் குறைவுமில்லை. லிடியாவுக்குத் தகுதியான வாலிபன் ஒருவன் லிடியாவை திருமணம் செய்ய முன் வந்தான். அவனது திருமண விருப்பத்தையும் திட்டத்தையும் சொன்னான். அவனுக்கு உடனே பதில் ஏதும் சொல்லிவிடவில்லை, சிந்திக்கலானார். வாழ்வின் அர்த்தம் தான் என்ன? உலகப் பாரம்பரியத்தின்படி நடந்து, கடந்து செல்வதுதான் வாழ்வா? கேள்விகள் எழுந்தன. படிப்பு, முடிந்ததும் ஒரு நல்லவேலை, திருமணம், பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள். கடைசியாக சாவு அதைத்தொடர்ந்து அடக்கம். **அவர் சிந்தையில் இனம்புரியாத ஒரு தேடுதல். தேட ஆரம்பித்தார் (Started Searching).**

**இதைவிட மேலான ஒரு வாழ்வு இருக்கவேண்டும் என்று எண்ண ஆரம்பித்தார்.** ஆனால் அந்த "மேலானது" எது என்று புரியவில்லை. லிடியா ஒரு பெயர் கிறிஸ்தவள் தான். அவ்வப்போது ஆலயத்துக்குச் செல்வார். ஆனாலும் அங்கு கொடுக்கப்படும் பிரசங்கம் எதுவும் அவரது கவனத்தை ஈர்ப்பதாகவும் தெரியவில்லை, ஏற்புடையதாகவும் தெரியவில்லை.

ஒருநாள் மத்தியான வேளை. திடீரென்று ஏற்பட்ட உள் உணர்வின் காரணமாக வேதாகமத்தை எடுத்து மத்தேயு சுவிசேஷத்தை வாசிக்க ஆரம்பித்தார். மலைப்பிரசங்கத்தின் பகுதி **"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்"** அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். இப்போது இதுதான் என் விருப்பம். தொடர்ந்து ஆர்வத்தோடு வாசித்தார். "கேளுங்கள்...தேடுங்கள்...தட்டுங்கள்"

என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பேசிய இடத்திற்கு வருகிறார். இதுவரை அவருக்கு இருதயத்திலிருந்து எப்படி ஜெபிப்பது என்று தெரியாது. இப்பொழுது ஒரு நாற்காலியில் கைகளை ஊன்றிக் கொண்டு முழங்காற்படியிட்டார். ஜெபிக்க ஆரம்பித்தார். “ஆண்டவரே, இப்படிச் சொன்ன நீர் உண்மை என்றால் உம்மை எனக்கு வெளிப்படுத்தும்” என்று ஜெபித்து கண்களைத் திறந்தார். அவருக்கு முன்பாக நீண்ட வெள்ளை அங்கி தரித்த ஒரு மனிதர், தன் இருகரங்களையும் விரித்தவராக நின்றுகொண்டிருந்தார். லிடியா தன்னையும் அறியாமல் வாயைத் திறந்து சத்தமாக “இயேசு” என்று குரல் கொடுத்தார். அவர் மறைந்து விட்டார். அவருடைய இருதயம் இனம்புரியாத சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நிறைந்தது. நான் தேடிக்கொண்டிருந்தது இதுதான் என்பதை சந்தேகமின்றி அறிந்துகொண்டார். இயேசு இன்னும் ஜீவிக்கிறவராயிருக்கிறார் என்பதை உறுதியாக அறிந்து கொண்டார். ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். ஒவ்வொரு நாளும் தன் சிந்தையில் ஏற்படுகிற மாற்றத்தை அவரால் உணர முடிந்தது. அவரிடத்திலிருந்த சில தீய பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலையடைவதை உணர்ந்தார். அந்த மாற்றங்கள் அவரது கண் முன்பாக வெளிப்படையாகக் காணக் கூடியதாக இருந்தது. ஒருநாள் அவரது ஜெபவேளையில் அவரையும் அறியாமல் அந்நியபாஷையில் பேச ஆரம்பித்தார். “நவமான பாஷைகளைப் பேசுவார்கள்” என்று விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறாரே. அதுதான் இதுவா? அது ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது. அதில் ஒரு சந்தோஷமிருப்பதை உணர்ந்தார்.

அந்த நகரில் எளிமையான ஒரு பகுதியில் ஒரு பெந்தேகோஸ்த் சபை இருப்பதாகக் கேள்விப்பட்டார். லிடியா ஒருநாள் அந்தச் சபைக்குச் சென்றார். அங்கிருந்த பாஸ்டரை சந்தித்துப் பேசினார். அவர் தரிசனங்களைக் காண்கிற அனுபவத்தையும் அந்நிய பாஷையில் பேசுவது மூலமாகப் பெற்றுக் கொள்ளுகிற அனுபவத்தையும் விவரித்துச் சொன்னார். ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியத்தை வேத ஆதாரத்தோடு விவரித்தார். அதை விளங்கிக் கொண்ட மாத்திரத்தில் அதற்குக் கீழ்ப்படிந்து அந்த பாஸ்டரை தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அநேகரின் நன்மதிப்பினைப் பெற்றிருந்த லிடியா வெறித்தனமான பெந்தெகோஸ்தினரிடம் (Crazy Pentecostals) சேர்ந்து கொண்டார் என்ற செய்தி பள்ளியிலும், அவர் வசித்த வட்டாரத்திலும் வேகமாகப் பரவ ஆரம்பித்தது. அவர் வேலை பார்த்த பள்ளியில் அவரை கேவலமாகக் கேலியும் கிண்டலும் செய்தனர். அவரோடு பணியாற்றிய சிலர்

பள்ளி முதன்மை நிறுவனருக்கு லிடியா லூத்தரன் உபதேசத்தை மீறிச் சென்றுவிட்டபடியால் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டு மென்று புகார் செய்தார்கள். லூத் தரன் கிறிஸ்தவ டென்மார்க்கில் இப்பிரச்சனை பூதாகரமாக மாறியது. முக்கிய பத்திரிக்கைகள் இச்செய் தியை முதன்மைப்படுத்தி எழுதின. பிரச்சனை டென்மார்க் பாராளு மன்றம் வரை சென்றது.

### டென்மார்க்கிலிருந்து எருச லேமுக்கு

பாராளுமன்றத்தில், லிடியா பள்ளியில் தொடருவதில் ஆட்சேபம் இல்லை. ஆனால் அவர் மற்றவர் களிடம் பேசி தனது உபதேச கருத்தை திணிக்க முயற்சிப்பாரானால் பாராளு மன்றம் அதை அனுமதிக்காது என்ற எச்சரிக்கையையும் சேர்த்தே கொடுத்தது. இந்தச் சூழ்நிலையில் இந்தப் பள்ளிப் பணிதான் தொடர்ந்து இருக்கும் பணி அல்ல என்பதை அறிந்துகொண்டார். எதிர்பாராத சூழ்நிலையில் காங்கோ நாட்டைச் சேர்ந்த மிஷனரியைச் சந்தித்தார். அவரிடம் பேசியபின் தான் டென் மார்க்கைவிட்டு எருசலேம் செல்ல வேண்டும் என்ற அகத்தூண்டுதல் அவரது சிந்தையில் ஏற்பட்டது.

எத்தனையோ ஆச்சரியமான அற் புதங்களும் ஆண்டவரின் கிருபை யின் பொழிவையும் அவர் பெற்று மகிழ்ந்து அனுபவித்தார். 1927இல் தன்னந்தனியாக டென்மார்க்கை விட்டு எருசலேமுக்குப் புறப்பட்டார். அப்போது இஸ்ரவேல் தனிநாடாக உருவாகாத காலம். டென்மார்க்கில் செல்வச் செழிப்பில் வாழ்ந்துவிட்டு இப்போது வறுமையை நோக்கிச் செல்லுகிறார். டென்மார்க்கில் கிடைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்குப் பஞ்ச மான இடத்தை நோக்கிச் செல்கிறார். வசதியான வாழ்விலிருந்து வசதி யற்ற இடத்தை நோக்கிச் செல்லு கிறார். டென்மார்க்கிலுள்ள உறவு களையெல்லாம் விட்டு உறவுகளே இல்லாத இடத்தை நோக்கிச் செல்லு கிறார், ஆனாலும் யோபைப் போல **"நான் போகும் வழியை அவர் அறிவார்"** என்ற அசைவில்லாத நிச்சயத்தோடு செல்லுகிறார். ஆகவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும், அவருடைய அன்பும், அவரோடுள்ள நெருக்கமான உறவும் அதன் விளை வாகப் பெற்று அனுபவித்த சந்தோஷ மும் நிறைவாக இருந்தது என்பதை ஒவ்வொரு நொடியும் உணர்ந்து மகிழ்ந்தார். ஆண்டவர் என்ன நோக்கத்திற்காக என்னை எருசலே முக்கு கொண்டுவந்தார்? இன்னும் அவருக்கு அது புரியாத புதிராகவே இருக்கிறது.

### தாய்போல் தேற்றும் தேவன்

இந்தச் சூழ்நிலையில் ஒருநாள் யூதமனிதர் ஒருவர் மரித்துக் கொண் டிருந்த தன் மகளை லிடியாவிடம் கொடுத்து இந்தக் குழந்தை பிழைத் தாலும், மரித்தாலும் இனி உங்கள் குழந்தை என்று ஒப்புவித்துவிட்டுச் சென்றுவிட்டார். அந்தக் குழந்தைக்

காக லிடியா ஜெபித்தார். அவள் ஆச்சரியமாக சுகமடைந்தாள். அவள் பெயர் டிக்வா (Tikvah). "டிக்வா" என்ற எபிரேயச் சொல்லுக்கு "நம்பிக்கை" என்று அர்த்தம். லிடியாவுக்கு ஒரு புது நம்பிக்கை வந்தது. லிடியா அவளுக்குத் தாயானாள். திருமணம் செய்துகொள்ளாத லிடியாவை ஆண்டவர் தாயாக்கினார். இந்தச் செய்தி அவர் குடியிருந்த வட்டாரத்தில் பரவ ஆரம்பித்தது. குறுகிய காலத்திற்குள்ளாக லிடியாவைத் தேடிவந்து, கைவிடப்பட்ட அநேகப் பெண் குழந்தைகளை (abandoned girls) லிடியாவின் பராமரிப்பு வேண்டி ஒப்படைத்தனர். இப்பொழுது அநேகப் பெண்குழந்தைகளுக்குத் தாயானார். ஒருதாய் தேற்றுவதுபோல அவர்களைப் பேணிப் பராமரித்தார். தாய் போலத்தேற்றும் தேவன் அவர்களோடிருந்தபடியால் அவர் அநேக உதவுங் கரங்களை எழுப்பினார். அக்குழந்தைகளின் தேவைகள் சந்திக்கப் பட்டன. எருசலேம் நகரில் முதல் முதலாக உருவான ஒரு சிறப்பான பெண்கள் காப்பகமாக மாறியது. அதை அவர்கள் ஜெபவீடு என்றே அழைத்தனர். தாயாக மாறிய லிடியா தான் கண்டுகொண்ட இயேசு கிறிஸ்துவின் அன்பை தனது பிள்ளைகளுக்கும் ஊட்டி வளர்த்தார். ஒவ்வொரு நாளும் வேதவாசிப்பு, ஜெபமும் முறையாக நடத்தி அவர்கள் ஆண்டவருக்குள் உருவாக்கப் பட்டனர். அவர்கள் ஆண்டவருடைய பிள்ளைகளானார்கள். அவர் அவர்களுக்கு தகப்பனானார். எருசலேமில் ஒரு சிறுகூட்டப் பெண்களை இயேசுவுக்காக லிடியாவைக் கொண்டு ஆண்டவர் உருவாக்கினார். "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 9:10). சுமார் 100 பிள்ளைகள் அங்கு பராமரிக்கப் பட்டனர். அவர்கள் அனைவரும் லிடியாவை அம்மா என்றுதான் அன்போடு அழைப்பார்கள். சுருக்கமாகச் சொன்னால் லிடியாவின் வாழ்வு இயேசுகிறிஸ்துவுக்காகக் கனிதரும் வாழ்வாக மாறியது. அங்கு உருவாக்கப்பட்ட பிள்ளைகள், பள்ளி, கல்லூரிப் படிப்புகள் முடித்தபின் வெளிநாடுகளுக்குச் சென்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக இருக்கின்றனர். சிலர் ஊழியக்காரர்களாகவும் இருக்கின்றனர். அன்று லிடியா பிரின்ஸ் போட்ட வித்து இன்று மரமாகி கிளைகள் விட்டு வளர்ந்து நிற்கின்றன. மக்கள் லிடியாவை "இஸ்ரவேலின் தாய்" (Mother in Israel) என்ற பட்டப் பெயரோடு அழைத்தனர். லிடியா 1975இல் தன்னுடைய 85ஆவது வயதில் பவுல் குறிப்பிடுவது போல "தன்னை ஆட்கொண்டவரும்தான் சேவித்தவருமான" ஆண்டவரின் சமுகத்தைச் சென்றடைந்தார். லிடியா மரித்தாலும் இன்றும் பேசப்படுகிறார். அவர்கள் ஆரம்பித்த "ஜெப வீடு" இன்றும் பெண்கள் காப்பகமாகச் செயல்படுகிறது.

**- 15ஆம் பக்கம் பார்க்க...**

2

# "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்"

**(யாத்.33:14)**

எகிப்து தேசத்தில் 400 ஆண்டுகள் அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களை ஆபிரகாமுக்கு தேவனாகிய கர்த்தர் ஆதி.15:13,14ல் அளித்த வாக்குறுதியின்படியே விடுவித்தார். வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைச் சுதந்தரிக்க மோசேயின் தலைமையில் விடுதலைப் பயணத்தைத் தொடங்கினார்கள். அந்த விடுதலைப் பயண வரலாறுதான் மோசே எழுதிய யாத்திராகமப் புத்தகம். இப்புத்தகம் கர்த்தர் தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து ஏற்ற வேளையில் விடுவிக்கக் கரிசனையுள்ளவராயிருந்தார் என்பதையும், அவர்களை வேறு பிரித்து தமக்கென்று ஒரு பரிசுத்த சந்ததியை உருவாக்கும் பொருட்டு எவ்வாறு கட்டளைகளையும், ஆசரிப்புக்கூடாரம், ஆசாரிய ஊழியம் போன்றவற்றையும் கொடுத்து வழி நடத்தினார் என்பதையும், ஏதேன் தோட்டத்தில் எப்படி ஆதாம், ஏவாளுடன் உறவாடினாரோ அதே போல மீண்டும் அந்த உறவு நிலைக்கு தம் மக்களைக் குறித்து விரும்புகிறார் என்பதையும் மையப்படுத்துகிற புத்தகமாயிருக்கிறது.

தலைப்பு வசனம், விடுதலைப் பயணத்தின்போது தேவனாகிய கர்த்தர் மோசே மூலமாக முழு இஸ்ரவேல் மக்களுக்கும் வாக்களித்ததாகும். அதே வாக்குறுதி இன்றும் ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கும் பொருந்தும் (ரோம.2:29). இது பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை நோக்கியப் பயணம். சாபத்திலிருந்து ஆசீர்வாதத்தை நோக்கிய பயணம். இப்பயணத்தை, பையூரிலிருந்து - பொய்யூருக்கு - பொய்யூரிலிருந்து - மெய்யூருக்கு என்றும், தாயின் கர்ப்பத்திலிருந்து மண்ணுலகிற்கும், இப்பூவுலகிலிருந்து விண்ணுலகிற்கு என்றும், ஒரு பக்தன் வர்ணிப்பது பொருத்தமானதாய் இருக்கிறதல்லவா? ஆம், சற்று சிந்திப்போமானால், நீங்களும், நானும் இவ்வுலகில் பயணிகள் தானே! இவ்வுலகம், ஒரு சத்திரம், சிறிது காலம் தங்கியிருக்கிறோம். இதைக் கடந்து செல்வோம். இதுவரை உதவிய கர்த்தருக்குக் கோடி ஸ்தோத்திரம். ஆம், அவருடைய மாறாத கிருபையினால் தானே இதுவரை வந்திருக்கிறோம்.

இந்தப் புதிய ஆண்டு 2021இல் நுழைந்திருக்கிற நம் எண்ணங்கள் எப்படிப்பட்டதாயிருக்கின்றன? கடந்த ஆண்டில் நம்மோடு இருந்த நமக்கு அருமையானவர்களில், சிலரைக் கொரோனா என்கிற கொள்ளைநோய் கொள்ளையாடி விட்டது. இந்த ஆண்டில் இன்னும் அந்த அலை எழுந்து 3ஆம் நிலைக்குச் செல்ல வாய்ப்பு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஏற்கனவே வேலையிழந்து, வருமானம் இழந்து சொத்து இழந்து, பிள்ளை

களின் படிப்பு, திருமணம் போன்றவை பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த ஆண்டு எப்படி இருக்குமோ என்கிற அச்சம் நம் எல்லார் முன்பும் இருப்பது இயல்பே. இதுவரை செல்லாத பாதையை எப்படி கடக்கப் போகிறோமோ என்கிற தயக்கம் நம்மை மேலிடுகிறது. ஆனால் நம்மை இதுவரைக் காத்து வழிநடத்திவந்த நமது பரம தகப்பன் சொல்வது என்ன? **“நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்”** ... ஏசா.41:10. **நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது, வேகாதிருப்பாய்”** (ஏசா.43:2) **“நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன்”** (எரே.30:17) போன்ற வாக்குகளால், நம்மை ஆறுதல்படுத்தும் தேவன், இந்தப் புத்தாண்டில் **“என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்”** என்று உற்சாகப்படுத்தி, ஊக்குவிக்கிறார். எத்துணை ஆறுதல்! “நானே நல்ல மேய்ப்பன்” என்றுரைக்கிற நம் கடவுள், பாலஸ்தீன மேய்ப்பர்கள் போல முன் செல்கிறவராய், இந்தப் புதிய ஆண்டில் “என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்” (சங்.89:34) என்கிற கடவுள், “நான் உனக்கு முன்பாகச் செல்கிறேன்” என்கிறார். அவர் சொன்னதைக் கட்டாயம் நிறைவேற்றுவார்.

**கடவுளின் பார்வையில் நான்**

தலைவர்கள், அமைச்சர்கள் போன்றோர் செல்லும்போது அவர்களுக்கு முன்பாக, பல பாதுகாப்பு செயல்களும், தங்குதடையற்ற வழியும், அமைத்துத் தரப்படுவதைப் பார்த்திருக்கிறோம். ஏனெனில் அரசின் கண்ணோட்டத்தில் அவர்கள் (VIP) மிக முக்கியமானவர்கள். அதேபோல் கடவுளின் பார்வையில் (எந்த பாகுபாடுமின்றி) நாம் ஒவ்வொருவரும் மிக முக்கியமானவர்கள். கண்மணி போன்றவர்கள். இதனால்தான், நாம் போக இருக்கும் வழிகளில் எல்லாம், நம்மைக் காத்து வழிநடத்தும்படி நம் அன்பின் ஆண்டவர் “என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்” என்கிறார்.

**மோசேயின் பார்வையில் கடவுளின் சமுகம்**

நீர் என்னோடுகூட வரவில்லை எனில் எங்களை இங்கிருந்து கொண்டு செல்ல வேண்டாம். நீர் இல்லாத கானான் எங்களுக்கு வேண்டாம். உம்முடைய சமுகம் இல்லாத இடம் உலகக் கண்ணோட்டத்தில் எவ்வளவு மேன்மையான தாய் இருந்தாலும் எனக்கு வேண்டாம். நீர் மாத்திரம் போதும். உமது சமுகமே எனக்கு மேலானது. இந்தப் புத்தாண்டில் மோசே போல நாமும் கடவுளின் சமுகத்திற்கு முதலிடம் கொடுப்போமா? சாது சுந்தர் சிங் தெய்வ சமுகத்தைப் பாராட்டும் முகமாக ஒருவேளை கர்த்தரின் சமுகம் நரகத்தில் இருந்தாலும், இயேசு கிறிஸ்துவோடு நரகத்தில் இருப்

பதையே நாடுவேன் என்றார். இயேசுவே, நீர் மாத்திரம் உமது சமுகம் மாத்திரமே எனக்கு போதும் என்பதே சாது சுந்தர்சிங் வாழ்வின் மந்திரமாய் இருந்தது. எல்லா பரிசுத்தவான்களின் வாழ்க்கையும் இதையே உணர்த்துகிறதாய் இருக்கிறது. காரணம் தெய்வ சமுகத்தின் அசாதா ரணமான தன்மையே.

**கடவுளின் சமுகம் எப்படிப் பட்டது?**

இதன் மேன்மையை நாம் முழுமையாய்ப் புரிந்து கொள்ள முடியாதெனினும், வேதாகமத்தின் அடிப்படையிலும், பல பரிசுத்தவான்களின் அனுபவங்களின் அடிப்படையிலும் மூன்று முக்கிய அம்சங்களைப் பின் வரும் தலைப்புகளில் காண்போம்.

**1. கடவுளின் பிரசன்னத்தில் - வல்லமை**

நமது கடவுளின் சமுகத்தில், நிகரற்ற வல்லமை உண்டு என்பதை வேதாகமத்தில் நாம் படிக்கும் பல நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன அல்லவா? கடவுளின் சமுகத்தில் வல்லமை உண்டு என்று உணர்ந்ததால்தான் "உலகத்தில் இருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர்" என்று (1 யோவா.4:4)இல் யோவான் கூறுகிறார். கடவுளின் வல்லமையைத் தம் வாழ்வின் அனுபவமாகக் கண்ட தாவீது "உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" என்கிறான் (சங்.18:29). அவரின் வல்லமையை அன்றாட வாழ்வில் கண்ட தாவீது கடவுளை "சேனைகளின் கர்த்தர்" என்று வர்ணிக்கிறதைக் காண்கிறோம். பரிசுத்தபவுல் ரோமா புரியாருக்கு எழுதும் கடிதத்தில் "தேவன் நம் பட்சத்தில் இருந்தால், நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?" என்று கடவுளின் வல்லமையை உரக்கச் சொல்கிறதைப் படிக்கிறோம். ஆம். நமது ஆண்டவரின் வல்லமையை யாரால் முழுவதும் விளக்க முடியும்? இந்தப் புதிய ஆண்டில், இந்த வல்லமையுள்ள தேவனின் பிரசன்னம் நமக்கு முன்பாகச் செல்லுமானால், நாம் ஒவ்வொரு வரும் வல்லமை நிறைந்த வாழ்வு வாழ முடியும். நம் வாழ்வில் வல்லமை காணப்படுகிறதா?

**2. தேவ சமுகத்தில் - பரிபூரண ஆனந்தம்**

தேவ சமுகத்தில் வல்லமையும், பராக்கிரமமும் மட்டும் அல்ல. பெரு மகிழ்ச்சியும், பேரானந்தமும் உண்டு. தாவீது தனது அனுபவத்தின் அடிப்படையில் "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" என்கிறான் (சங்.16:11). மேலும் தாவீது, தாவீதின் நகரத்திற்கு உடன்படிக்கைப் பெட்டி வந்தபோது தேவ பிரசன்னத்தை உணர்ந்தவனாக நடனமாடுகிறான். அவன் கடவுளின் பிரசன்னத்தின் ஆனந்தத்தால் மேற்கொள்ளப்பட்டு போர் வீரர்கள், பெண்கள், தன்னைச் சுற்றிலும் இருப்பதைக் கூட பொருட்படுத்தாமல் ஆடிப்பாடி கடவுளைத் துதிக்கிறான். கடவுளின் பிரசன்னத்தின் மகிழ்ச்சியால் நிரப்பப்படாதவர்கள்,

காற்றுப் போன பலூன் போல, சிறகொடிந்த பறவை போல மாறு கிறதை வேதாகமம் பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறதைப் பார்க்கிறோம். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு சிம் சோனும், சவுல் மன்னனும்தான். ஒரு மனிதன் கடவுளின் பிரசன்னத் தால் ஆட்கொள்ளப்படும் போது விளக்க முடியாத மகிழ்ச்சி அவனை மேற்கொள்கிறது. அதனால் அவன் தன்னைச் சுற்றியுள்ளோரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறான். கிறிஸ்துவின் பிரசன்னத்தின் மகிழ்ச்சி நம் வாழ்வில் உண்டா?

**3. தேவ சமுகத்தில் - அற்புதம்**

தேவ சமுகத்தில் வல்லமையும், ஆனந்தமும் மட்டுமல்ல, அற்புதங் களும் உண்டு என்பதை வேதா கமம் பல இடங்களில் தெளிவுபடுத்து கிறதைப் பார்க்கிறோம். சுமார் 120 அற்புதங்களை வேதத்தில் காண் கிறோம். தெய்வப் பிரசன்னம், எங் கெல்லாம், எவரிடமெல்லாம் இருந் ததோ அங்கெல்லாம் அற்புதங்கள் நடைபெற்றதைப் பார்க்கிறோம். எண்.17:7,8இல் இப்படி வாசிக்கி றோம். மோசே சாட்சியின் கூடா ரத்தில் கர்த்தரின் சமுகத்தில் கோல் களை வைத்தான். அவைகளில் ஆரோனின் கோல் மட்டும் துளிர்த்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து வாது மைப் பழங்களைக் கொடுத்தது. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ் துவின் பூலோகப் பணிக்காலம் முழு வதும் அற்புதங்களால் நிறைந் திருந்தது. குருடர்கள் பார்வையடைந் தார்கள், செவிடர்களின் காதுகள் திறந்தன, சப்பாணிகள் நடந்தார்கள், மரித்தோர் உயிருடன் எழுந்தார்கள். நமது ஆண்டவரின் பிரசன்னத்தின் மூலம் அற்புதங்களைப் பெற்ற பேது ருவின் நிழல்பட்டு அநேகர் சுகம் பெற்றார்கள். பவுலின் உருமாலைத் தொட்டவர்கள் வியாதியிலிருந்து விடு தலை பெற்றார்கள். T.L. ஆஸ்பார்ன் பயணம் செய்த விமானத்தின் நிழல் பட்டு சுகம் பெற்றார்கள் போன்ற நிகழ்வுகள் கடவுளின் முகத்தில் காணப்பட்ட அற்புத சக்தியைத் தானே காட்டுகிறது. கடவுளின் சமுகம் எங்கு உண்டோ அங்கே அற்புதம் நடக்கும் என்பதுதான் நிதர்சனம். நம் வாழ்வில், அற்புதங்களை ருசித்திருக் கிறோமா? என் சமுகம் உனக்கு முன் பாகச் செல்லும் என்கிற கடவுளின் வாக்கைப் பற்றிக் கொண்டு இந்த ஆண்டுக்குள் நுழைவோமானால் எந்தச் சூழலையும் நாம் மேற்கொள்ள முடியும். எந்தப் பாதையும் நமக்குக் கடினமானதாகவோ, எந்தப் பள்ளத் தாக்கும் நாம் கடக்க முடியாத அள வுக்கு ஆழமானதாகவோ இருக்காது. ‘‘நான் சகலத்தையும் புதிதாக்கு கிறேன்’’ (வெளி.21:5) ‘‘உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணு வேன்’’ (மீகா.7:15) போன்ற வாக்குத் தத்தங்களை நமக்கு உரித்தாக்கி, ‘‘என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்’’ என்கிற இந்த ஆண்டின் வாக்கைக் காலைதோறும் விசுவாசத்துடன் ஏற்று, ஆண்டவர் பின் சென்று நம் பய ணத்தை வெற்றிப் பயணமாக ஆக்க கடவுள் தாமே கிருபை செய்வாராக!

**Wish you all a christ led New year**

**- Dr. J. Johnson Sundararaj, Ph.D.**
**Former Vice-principal, American college,**
**Mo:9843680054**

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

- பாகம் 14

**மகிழ்ச்சி மலைகளில் பயணித்தல்**

கிறிஸ்தியானும், நன்நம்பிக்கையும் (Hopeful) சந்தேகக் கோட்டையிலிருந்து கடைசியாக விடுபட்டு பரலோகப் பாதைக்கு வந்து சேர்ந்தனர். அதைத் தொடர்ந்து பயணித்து, மகிழ்ச்சி மலை என்னும் மலைப் பகுதியை வந்தடைந்தனர். அங்கே அநேக மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதிகளில் சலனமின்றி ஓடிக்கொண்டிருக்கும் தெளிந்த நீரோடைகள், கண்ணுக்கெட்டும் தூரம் வரை பச்சைப்பசேலென்றிருக்கும் செழிப்பான காட்சிகள் கண்களைக் கவர்ந்தன. கனிகள் நிறைந்த அநேக பழ மரங்கள் நிறைந்திருந்தன. களைத்து வரும் பயணிகளுக்கு அது ஆறுதலும், புத்துணர்வும் கொடுப்பதாக இருந்தன. கிறிஸ்தியானும், நன்நம்பிக்கையும் அங்குள்ள சில கனிகளைப் புசித்து ஓய்வு எடுத்தனர். அங்குள்ள மேய்ப்பர்கள் அவர்களை விசாரித்து அன்போடு பழகினார்கள். அவர்கள் அதற்கென்றே தங்களது எஜமான்களினால் பழக்குவிக்கப்பட்டவர்கள் போன்று தோன்றினார்கள். அவர்கள் "எங்கள் எஜமான் அந்நியரை உபசரிக்க வேண்டும் என்று எங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்" என்று புன்சிரிப்போடு தெரிவித்தனர்.

**நரகப் பள்ளத்தாக்கு**

அந்த மேய்ப்பர்கள், **அறிவு** (Knowledge), **அனுபவம்** (Experience), **விழிப்பு** (Watchful) மற்றும் **மெய்ம்மை** (sincere) என்று அவர்களுடைய பெயரை அவர்களிடமிருந்து அறிந்துகொண்டனர். மறுநாள் காலையில் பயணிகள் இருவரையும் மேய்ப்பர்கள் தங்களுடன் உலாவ அழைத்துச் சென்றனர். இயற்கையின் பேரெழிலை இரசித்தபடியே அவர்கள் நடந்து சென்றனர். பின்னர் **வேதப்புரட்டு** (Error) எனும் மலையுச்சிக்கு அழைத்து சென்றனர். அங்கிருந்து கீழே பார்த்தபோது ஒரு பள்ளத்தாக்கு முழுவதும் எலும்புகள் நிறைந்து கிடப்பதைக் கண்டார்கள். **"அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு வழிவிலகி தங்களை அழிவுக்கு உட்படுத்திக் கொண்டவர்கள்"** என மேய்ப்பர்கள் சொன்னார்கள். அங்கிருந்து மற்றுமொரு மலையுச்சிக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து பள்ளத்தாக்கைப் பார்த்தபோது ஒரு கூட்டம் பார்வை இழந்தவர்களை காண முடிந்தது. அவர்கள் கல்லறைகளில் தடுமாறி அவலக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர். இவர்களெல்லாம் சந்தேகக் கோட்டையில் விரக்தி எனும் அரக்கனால் (Giant Despair) பாதிக்கப்பட்டுத் தங்கள் கண்பார்வையை இழந்தவர்கள். **குறுக்கு வழியைத் தெரிந்தெடுத்துத் தடுமாறி, கல்**

**லறைகளில் விழுந்தவர்கள்.** கிறிஸ்தியானும், நன்நம்பிக்கையும் தாங்கள் எவ்வளவு அற்புதமாகத் தப்பியிருக்கிறோம் என்று எண்ணி வியந்தார்கள். பின்னர் மேய்ப்பர்கள் அந்த மலையின் ஒரு பகுதியிலிருந்த கதவைத் திறந்து காட்டினார்கள். அதைப் பார்த்தால் காரிருளும் புகையுமாக இருந்தது. அது நரகத்திற்குச் செல்லும் வழி என்று மேய்ப்பர்கள் மூலம் அறிந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் தங்கள் சேஷ்டபுத்திர பாகத்தை (Birth right) விற்றுப் போட்டவர்கள். ஏசா, யூதாஸ் காரியோத், அனனியா, சப்பீராள் போன்றவர்கள் இந்த வழியாகச் சென்றவர்கள். அந்தக் காட்சியைக் கண்டே அவர்கள் இருவரும் அஞ்சி அதிர்ந்து போனார்கள்.

கிறிஸ்தியானும், நன்நம்பிக்கையும் இப்பொழுது தங்கள் பயணத்தைத் தொடர்ந்து செல்ல விரும்பினார்கள். அப்பொழுது மேய்ப்பர்கள் அவர்களிடத்தில் ஒரு தொலைநோக்கிக் கண்ணாடியைக் (Telescope) கொடுத்துப் பார்க்கச் சொன்னார்கள். அவர்கள் பார்த்த போது வெகுதூரத்தில் மோட்சப் பட்டணத்தின் அழகான வாசல் தெரிந்தது. இந்த வேளையில் மேய்ப்பர்கள் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கைக் குறிப்பைக் கொடுத்தார்கள். **வீண்புகழ்ச்சி** (Flatterer) செய்பவனுக்கும், **வஞ்சிக்கிறவர்களுக்கும்** (Deceiver) எச்சரிக்கையாயிருங்கள் என்பதுதான் அந்தக் குறிப்பு. பயணிகள் இருவரையும் அவர்கள் போகவேண்டிய பாதையில் அனுப்பி வைத்தனர். மகிழ்ச்சி மலையை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். சற்று தூரம் சென்றபின் **புத்தியீனன்** (Ignorance) என்ற இளைஞன் ஒருவன் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அவன் **கபடப் பட்டணத்தின்** (Country of Conceit) வழியாகச் செல்லும் ஒரு குறுக்குவழியைக் குறித்து அவர்களுக்குச் சொன்னான்.

கிறிஸ்தியானும், நன்நம்பிக்கையும், புத்தியீனன் சொல்லும் குறுக்குவழியைக் குறித்து விசாரித்தார்கள். புத்தியீனன் தானும் மோட்சப் பட்டணத்தை நோக்கிப் பயணிக்கும் பயணிதான் என்றும், தான்செய்த நற்செயல்கள் தன்னை நிச்சயமாக மோட்சப்பட்டணத்தில் கொண்டு சேர்க்கும் என்றும் உறுதியாக வாதிட்டான். ஆனால் கிறிஸ்தியானும், நன்நம்பிக்கையும், கிருபையையும் கிருபையால் கிடைக்கும் இரட்சிப்பையும் முதன்மைப்படுத்திப் பேசியதை கேட்டு புத்தியீனன் மிகவும் கோபமடைந்தான். சற்று தூரம் சென்றபின் மோட்சப் பயணிகள் இருவரும், பிசாசுகள் ஒரு மனிதனைச் சங்கிலியால் கட்டி நரகத்திற்குச் செல்லும் வாசலுக்குக் கொண்டு செல்வதைக் கண்டார்கள். ஏனெனில் அவன் தன் சேஷ்டப்புத்திரபாகத்தை விற்றுப் போட்டவனும், அவன் பெயர் அற்ப விசுவாசி (Little Faith) என்றும் சொல்லப்பட்டது. அவன் மோட்சப்பட்டணத்திற்குப் பயணத்தைத் தொடங்கியவன் தான். ஆனால் கொள்ளையர்கள்

அவனைக் கொள்ளையாடி விட்டனர். ஆனாலும் அவன் பணத்தை இழந் தாலும் தங்க நகைகளை இழக்க வில்லை. அவன் அவைகளை வைத் திருந்தாலும் அவற்றை உபயோகிக்க வில்லை. விற்கவுமில்லை. சேஷ்ட புத்திரபாகத்தை வைத்திருந்தாலும் அதை அவன் உரிமை பாராட்டவு மில்லை, பயன்படுத்தவுமில்லை. இது மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கை யாயிருக்கிறது.

கிறிஸ்தியானும், நன்நம்பிக் கையும் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கும்போது வெள்ளை அங்கி தரித்திருந்த மனிதர் ஒருவர் அவர்களிடம் வந்து அவர்களை மோட்சப்பட்டணத்திற்கு சரியான பாதையில் நடத்திச் செல்வதாக மிகவும் கனிவோடு பேசினான். மோட்சப்பட்டணத்திற்குப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் அவர்களைப் பாராட்டியும் பேசினான். அவன் யார் என்பதை விளங்கிக் கொள்ளா மலேயே அவனைப் பின்பற்ற ஆரம் பித்தார்கள். ஏனெனில் அவனது பேச்சில் மதிமயங்கி அவனை முற்று மாக நம்பினார்கள். ஆனால் அவன் காட்டிய பாதை மோட்சப் பட்டணம் பாதையை விட்டு மாறி தரையில் புதைத்து மறைத்து வைக்கப்பட் டிருந்த வலையில் சிக்கிக் கொண் டார்கள். அப்பொழுதுதான் மேய்ப் பர்கள் சொன்ன வீண்புகழ்ச்சியை நம்பி வழிமாறிவிடக்கூடாது என்ற எச்சரிக்கையை நினைவுகூர்ந் தார்கள். அவ்வேளையில் தேவ தூதன் தோன்றி சரியான வெளிப் படுத்தலைக் கொடுத்து விடுவித்தான். அவர்களை வஞ்சகமாக வழிநடத்தி வழியைத் தவறச் செய்தவன் ஒளி யின் தூதன் (Angel of Light) என் பதைப் புரிந்து கொண்டார்கள். மீண்டும் கிறிஸ்தியானும், நன்நம்பிக் கையும் பயணத்தைத் தொடர்ந் தார்கள்.

**நாம் கற்றுக்கொள்வது**

நம்மைச் சுற்றியுள்ள அவநம்பிக் கையான சூழ்நிலைகளின் மத்தியில் கடந்து செல்லும் பொழுது ஆண்டவர் தமது ஆறுதலையும் தேறுதலின் வழிமுறைகளையும் நமக்கு ஏற்ற வேளையில் கொடுப்பார். மேய்ப் பர்கள் மூலம் ஆலோசனைகளும் வழிநடத்துதலும் கிடைத்ததுபோல நமக்கும் மோட்சப் பட்டணப் பயணத் தில் பரலோகத்தை முன்சுவைக்கும் அனுபவங்கள் கிடைக்கும். பரலோக வெளிப்படுத்தல்கள் நமக்கு இருந்த சிலவேளைகளில் மதிமயங்கி வழி நடத்துதல்களை இழக்கும் தருணங் களும் வருகின்றன. ஆனாலும் அது போன்ற வேளைகளில் அவரே தமது மக்கள் மூலமாக அல்லது அவரது வார்த்தை மூலமாக நம்மிடம் வந்து வழிநடத்துகிறார். நமக்கு முன்பாகப் பயணித்தவர்களின் வார்த்தை களைப் பகுத்தறிந்து கவனமாக அவற்றைப் பற்றிக் கொள்ள வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நம்முடைய சேஷ்டபுத்திர பாகத்தை அல்லது பிறப்புரிமையை விற்றுவிடா திருப்பதில் கவனமாக இருப்போம்.

– சகோதரி. லாரா டிலனோ,
lauradelano@yahoo.com

# நான் உங்களோடே இருக்கிறேன்

**"நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" (சங்.32:8)**

இந்தப் புதிய ஆண்டின் தொடக்கத்தில் தேவனாகிய கர்த்தர் நமக்கு ஆலோசனைக் கர்த்தாவாக தம்மை வெளிப்படுத்துகிறார். தலைப்பு வசனத்திலிருந்து தம்முடைய மூன்று தன்மைகளை நமக்கு வெளிப்படுத்து கிறார். "போதகர், வழிகாட்டி, ஆலோசகர். அதைக் குறித்துத்தான் இந்த செய்தியில் காணப்போகிறோம்.

## 1. போதகர்

எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள். "பிதாவினிடத்தில் கேட்டு, கற்றுக்கொள்கிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" என்று யோவா.6:45இல் இயேசு கூறுகிறார். ஆம், நாம் பிதாவினிடத்தில் கேட்டு, கற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவிடம் வந்தவர்களாயிருக்கிறோம். நமக்குப் போதிக்கும் முழுப்பொறுப்பையும் தேவனே ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்தப் போதனை எந்த ஜீவராசிகளுக்கும் இல்லாது மனுக்குலமாகிய நமக்குக் கிடைத்த சிலாக்கியம். தேவனுடைய போதனைகள் மனிதபோதனை களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. **அவர் நமக்குப் போதிப்பதை நாம் விசுவாசிப்பதற்கும் அதை விளங்கி உணர்ந்து கொள்ளுவதற்கும் அதன்படி ஜீவிக்கும்படியாகவும், அவர் நமக்குக் கிருபையும் கொடுக்கிறார்.** அவர் நமக்குப் போதிப்பதை நாம் கற்றுக்கொள்ளும் வண்ணமாக தெளிவாகப் போதிக்கிறார். நாம் நன்றாய்க் கற்றுக் கொள்ளும்படியாக நமது மனக் கண்களையும் பிரகாசமுள்ள தாக்குகிறார்.

மேலும் 1 தெச.4:9இன்படி **அவருடைய போதனைகளுள் மேன்மை யான போதனை அன்புதான்.** நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படி தேவன் நமக்குப் போதிக்கிறார். நாம் அதற்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும். கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு அன்பே பிரதானமானது. சகோதர அன்பு நம்மை ஆளுகை செய்யவேண்டும். நாம் சகோதர அன்புள்ளவர்களாக இருப்பது நமது கடமைகளில் ஒன்றாக உள்ளது. ஒருவர் பாடுகளை அனுபவிக்கும்போது மற்றவர் அவர் மீது அன்பாகவும், ஆதரவாகவும் இருக்கவேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும். ஒருவருடைய தளர்ந்த கைகளை மற்றவர் பலப்படுத்த வேண்டும்.

மேலும் யோவான் 13:34,35இல் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதை "புதிதான கட்டளை" என்று சொல்கிறார். அதாவது இது ஆலோசனையல்ல,

கட்டளை. எனவே கண்டிப்பாகக் கைக்கொள்ள வேண்டும். ஒருவரி லொருவர் அன்பாயிருங்கள் என்றால். நாம் நம்முடைய அன்பைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். மேலும் ''நான் உங்களில் அன்பாயிருந்தது போல'' என்றும் இயேசு குறிப்பிடுகிறார். யோவான் 15:13இன்படி நாம் ஜீவனைக் கொடுக்கிற அன்புடையவர்களாய் இருக்கவேண்டும். நாம் ஒருவரிலொருவர் அன்புள்ள வர்களாக இருக்கும்போது, நம்முடைய அன்பின் மூலமாக நாம் இயேசு கிறிஸ்துவின் இருதயத்தை உடையவர்களாக இருப்பதை வெளிப்படுத்து கிறோம். நீங்கள் அற்புதங்களைச் செய்வதினால் அல்ல. நீங்கள் ஒருவரி லொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லோரும் அறிவார்கள் என்று இயேசுகிறிஸ்து அன்பை முக்கியப்படுத்துகிறார்.

நம்முடைய சுபாவங்கள் எல்லாவற்றையும் விட, ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து முதன்மைப்படுத்துகிறார். இதுவே நமக்கு மெய்யான மகிமையாயிருக்கிறது. மேலும் நம்முடைய வாழ்க்கையின் எல்லாக் காரியங்களிலும் நம் தேவன் நம்மைப் போதித்து நடத்துவார். அவர் இந்த வருடத்தின் ஒவ்வொரு நாளும் நமக்குப் போதிப்பார். இதனால் நம் வாழ்நாள் நன்மையால் நிறைந்து நீடித்திருக்கும்.

**2. வழிகாட்டி**

''நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்'' என்று நம் தேவன் சொல்வது அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்கான வாக்குத்தத்தமாகும். ஆசீர் வதிக்கப்பட்ட பாதையில் அவர் நம்மை வழிநடத்துவார். இயேசு நமக்கு நல்ல மேய்ப்பராயிருந்து நம்மைப் புல்லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலும் நம்மை நடத்துவார். இயேசு நமக்கு நல்ல மேய்ப்பராயிருப்ப தால் நாம் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. அவர் நம்மை நடத்துவ தால் ஆபத்துக்களோ, நாசமோசங்களோ அணுகாது. அவர் நம்மைப் பாது காத்துக் கொள்ளுவார். நமக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்கள், பாது காப்பு, பராமரிப்பு, ஆறுதல் எல்லாம் தருகின்ற நல்ல மேய்ப்பர் அவர் (சங்.23).

நம் இயேசு நம்மைக் கரம்பிடித்து வழிநடத்துவார். நாம் அவர் கரங்களில் இருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்வோம். அவர் நமக்கு இளைப்பாறு தலையும், மன அமைதியையும் தந்து நம்மை நடத்துவார். திருப்தியோடு நம்மை நடத்துவார். குறைவில்லாமல் நம்மை நடத்துவார். குறைவுகள் நமக்கு உண்டானாலும் குறைவாகத் தெரியாத வண்ணம் நம்மைத் திருப்தியாக நடத்துவார். இதினிமித்தம் நாம் பதட்டமில்லாமல் சமாதானத்தோடு இருப்போம். நமது மேய்ப்பர் இயேசு நம்மை மேய்க்கின்ற இடங்கள் எல்லாமே புல்லுள்ளதாகவே இருக்கும். நம்மைச் சரியாக வழிநடத்தும்படியாக அவர்

எப்பொழுதும் நமக்கு முன்பாகப் போகிறார்.மேலும் கர்த்தர் நம்முடைய மனதை நடத்துகிறார். நம்முடைய ஆத்துமாவை நடத்துகிறார். நம்முடைய சரீரத்தையும் நடத்துகிறார். நம்முடைய கண்களை, செவிகளை, வாயை, கால்களை, கைகளை கர்த்தரே நடத்துவார். அதாவது நமது பார்வைகள், கேள்விகள், பேச்சுகள், நடக்கைகள், கிரியைகள் அனைத்தும் கர்த்தரால் வழிநடத்தப்படுகின்றன. அமர்ந்த தண்ணீர், புத்துணர்ச்சி, சந்தோஷம் தரக்கூடியது. நமக்குப் புத்துணர்ச்சியையும், சந்தோஷத்தையும் தந்து நம்மை நடத்துவார். அசுத்தமான தண்ணீர்களண்டையில் அல்ல, அமர்ந்த சுத்தமான தண்ணீர்களண்டையில் நம்மை நடத்துவார். கொந்தளிக்கும் கடலிலோ, பெரு வெள்ளத்திலோ கர்த்தர் நம்மைக் கொண்டுபோய் விடுவதில்லை. அமர்ந்த தண்ணீர் சத்தமில்லாமல் ஓடுகின்ற நீரோடையாக இருக்கும். அதுபோல நம்முடைய ஆவியில், ஆத்துமாவில் அமைதல் உண்டாயிருக்கும். நமது ஊழியங்களை ஆரவாரத்தோடும், பதட்டத்தோடும் அல்ல. அமைதலோடு செய்வோம். நாம் செய்ய வேண்டியவைகளை உறுதியோடு செய்வோம்.

அமர்ந்த தண்ணீர் ஆரவாரமின்றி அமைதியாக ஓடி முன்னேறிக் கொண்டிருக்கும் நாமும் எல்லாக் காரியங்களிலும் அமைதலோடு முன்னேறிச் செல்லும்படியாக நம்மை நடத்துவார். நம்மை நீதியின் பாதையில் நடத்துவார். உங்கள் ஊழியத்தை நிறைவேற்ற உங்களை வழிநடத்துவார். அவர் தன்னுடைய பராமரிப்பினால் உங்களை நடத்துவார். உங்கள் மனசாட்சியின் மூலமாகவும் உங்களை நடத்துவார். காரியங்கள் நேர்த்தியாக செய்யப் படும்போது மட்டுமே நமக்கு சந்தோஷம் உண்டாகும். நமக்கு சந்தோஷம் உண்டாகும்படி அவர் நம்மை வழிநடத்துவார். அவர் நம்மை அநியாயத்திலல்ல, நியாயத்திலே நடத்துவார்.

மேலும் சங்.48:14இன் படி அவர் நம்மை மரணபரியந்தம் நடத்துவார். ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் நம்மை நடத்துவார். இம்மையிலும், மறுமையிலும் அவர் நம்மை நடத்துவார். நாம் இந்தப் பூமியில் ஜீவனோடிருக்கும் நாள்வரை மட்டுமல்ல, நாம் மரித்தபின்பும் அவர் நம்மை வழிநடத்து வார். நாம் நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு நம்மைக் கரம் பிடித்து வழிநடத்துவார். அவருடைய இரகசிய வருகையின் போது - மறுரூபமாக்கப்பட, அல்லது உயிர்த்தெழும்பி மேகங்கள் மேல் ஆகாயத்தில் அவரிடத்தில் சேர்க்கப்பட அவர் நம்மை நடத்துவார்.

**3. ஆலோசகர்**

தேவன் தம்முடைய வசனங்களினாலும், பரிசுத்த ஆவியினாலும் நமக்கு ஆலோசனை தருகிறார். அதற்காக அவரை மகிமைப்படுத்த வேண்டும். அவரது ஆலோசனைகளை நாம் தியானிக்க வேண்டும். அவருடைய

ஆலோசனைகளின்படி நடப்பதே நமக்குப் பாதுகாப்பானது. அதுவே நம்மை நித்தியத்திலே கொண்டு போய்ச் சேர்க்கும். அவரது ஆலோசனை செங் கடலிலோ அல்லது யோர்தானின் வழியாகச் செல்வதாகவோ இருந்தாலும் பயப்படத் தேவையில்லை. கர்த்தர் உங்களோடு வருவார். கடலின் நடுவே கால் நனையாதபடி கொண்டு போவார். நாம் சோதிக்கப்பட்டாலும் கர்த்தரை நம்பி ஜீவிக்க வேண்டும். அப்போது விடுதலையும், ஜெயமும் தருவார். இதனால் நமக்கு மகிமை உண்டாகும்.

கர்த்தர் நமக்கு ஆலோசனை மட்டுமல்ல, அந்த ஆலோசனைப்படி ஜீவிக்க பெலனையும் தருகிறார் (ஏசா.11:2). கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரிய மானவர் (ஏசா.28:29). நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள அவர் நமக்கு ஞானமுள்ள ஆலோசனைகளைத் தருகிறார். ஒரு காரியத்தைப் பகுத்தறி வோடு செய்ய ஆலோசனை தருகிறார். காரியங்களை எப்படிச் செய்வது எவ்வளவு காலத்திற்குள் செய்வது என்றும் ஆலோசனை தருகிறார். கர்த் தருடைய ஆலோசனை பரிசுத்தமானது, கிருபை நிறைந்தது, நித்தியமானது.

உன்னைத் தண்டிக்க வேண்டிய காரியத்திலும் நீ தண்டிக்கப்படாது மன்னிப்பை, இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு ஆலோசனை தருகிறார். அவரது ஆலோசனை உங்கள் இருதயத்தைப் பக்குவப்படுத்தி, உங்களைத் தண்டனைக்குத் தப்புவிக்கிறது. எனவே அவரது ஆலோசனை களை நம்பி அவரையே சார்ந்துகொள்ளுவோம். அவரது ஆலோசனை நம்மை உணர்த்துகிறது. சிலவேளைகளில் கண்ணீர் சிந்த வைக்கிறது. நாம் பயபக்தியோடு அவரைத் துதிக்கிறவர்களாக மாறுகிறோம். கர்த்தருடைய ஆலோசனை மாராவை மதுரமாக்கினது. சாதாரணத் தண்ணீரை அதிக சுவைமிகுந்த திராட்சரசமாக மாற்றினது. எரிகோவின் பலத்த மதில்களை தகர்ந்து விழும்படிச் செய்தது.

கர்த்தருடைய ஆலோசனைகள் நமக்குள் ஆவியின் கனிகளை உண் டாக்குகிறது. கிறிஸ்துவுக்குள் நம்மைத் தேறினவர்களாக்குகிறது. கற்புள்ள கன்னிகையாக நம்மைப் பாதுகாக்கிறது. கறை, திரை, பிழையற்ற பரிசுத்தமும், மகிமையுமுள்ள சபையாக நம்மைப் பூரணப்படுத்துகிறது. நம்மை அன்பிலே பரிசுத்தமும், குற்றமற்றவர்களுமாக்குகிறது. வழுவாதபடி பாதுகாக்கிறது. மிகுந்த மகிழ்ச்சியுடையவர்களாக்குகிறது. மாசற்ற மண வாட்டியாக நம்மை நமது நித்திய மணவாளனாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட தகுதிப்படுத்துகின்றது.

இந்தப் புதிய ஆண்டில் நல்ல போதகராக, நல்ல வழிகாட்டியாக, நல்ல ஆலோசகராக "நான் உன்னோடு இருக்கிறேன்" என்று தேவன் உங்களுக்குச் சொல்லுகிறார். ●

# அவர் இறந்துவிட்டார்!

அவர் இறந்துவிட்டார் - அடக்கம் செய்யணும் என்று சொல்லிக்கொண்டே அநேகர் சென்றார்கள். மெல்ல எட்டிப்பார்த்தேன். மூச்சு இல்லை. ஆனால், இப்போதுதான் இறந்திருக்கிறாள் என்பதை மட்டும் என்னால் நம்ப முடிய வில்லை. ஏன்? அதுதான் என் கவிதை.

1. 20 ஆண்டுகளுக்கு முன் அவர் மனைவி இறந்தபிறகு "சாப்பிட்டாயா" என்று யாரும் கேட்காத நேரத்தில் அவர் இறந்திருந்தார் - **அப்பொழுது யாருமே கவனிக்கவில்லை.**

2. "பொண்டாட்டி போனதுமே போய் தொலைய வேண்டியது தானே" என்று காதுபட மருமகள் பேசியபோது அவர் இறந்திருந்தார் - **அப்பொழுது யாருமே கவனிக்கவில்லை.**

3. தாய்க்குப் பின் தாரம், தாரத்திற்கு பின் வீட்டின் ஓரம் என்று வாழ்ந்தபோது அவர் இறந்திருந்தார் - **அப்பொழுது யாருமே கவனிக்கவில்லை.**

4. "காசு எங்க மரத்திலையா காய்க்குது" என்று மகன் அமில வார்த்தையை வீசியபோது அவர் இறந்திருந்தார் - **அப்பொழுது யாருமே கவனிக்கவில்லை.**

5. "என்னாங்க, ரொம்ப தூரத்திலிருக்கிற முதியோர் இல்லத்துல விட்டுட்டு தலை முழுகிட்டு வந்திடுங்க" என்று காதிலே விழுந்தபோது அவர் இறந்திருந்தார் - **அப்பொழுது யாருமே கவனிக்கவில்லை.**

6. "உனக்கென்னப்பா, மனைவி தொல்லையில்லை" என்று வாழ்த்துவதுபோல் கிண்டலடிக்கப்பட்ட போது அவர் இறந்திருந்தார் - **அப்பொழுது யாருமே கவனிக்கவில்லை.**

இப்போதுதான் இறந்தார் என்கிறார்கள். எப்படி நான் நம்புவது? அப்பா! என்ன கவிதை!

நீங்கள் செல்லும் வழியில் இப்படி யாராவது இறந்து கொண்டிருப்பார்கள். ஒரு வினாடியாவது நின்று, பேசி விட்டுச் செல்லுங்கள். இல்லையேல், உங்கள் அருகி லேயே இறந்து கொண்டிருப்பார்கள். புரிந்து கொள்ளுங்கள். **வாழ்க்கை என்பது நாம் வாழ்வது மட்டுமல்ல, பிறரை வாழ வைப்பதும் தான்.** பலர் இறந்து விடு கிறார்கள். புதைக்கத்தான் சில ஆண்டுகள் ஆகிறது.

நம்ம வீட்டின் நிலவரம் என்ன? மனச்சாட்சியோடு சிந்தித்துப் பார்ப்போமே. நம்முடைய வார்த்தையால், செயலால் சிலரையேனும் சந்தோஷப்படுத்தலாமே. "உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக" என்ற கட்டளையைப் பெற்றிருக்கிறோமே (யாத்.20:12). "நன்மைசெய்யும்படி உனக்குத் திராணி யிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே" என்றும் (நீதி.3:27), "ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யா மற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்றும் யாக்.4:17 மூலம் வேதம் சொல்லும் எச்சரிக்கையின் சத்தம் நமது காதில் தொனிக்கிறதா? ●

**- நன்றி: TWR தகவல்**

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, கவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 06366826622

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805

WORD OF CHRIST MINISTRIES